சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் சென்னை–08
ந.க.எண். 2116/அ5/2022 நாள். . 06.2022

பொருள்: பள்ளிக் கல்வி –சென்னை மாவட்டம்– உயர்/மேல்நிலை பள்ளிகளில் முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு–பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு–அனைத்து அரசு/அரசு நிதி உதவி பெறும் மற்றும் மெட்ரிக் உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் அனைத்து முதுகலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்களை விடைத்தாள் திருத்தும் முகாமில் பணியெற்கும் பொருட்டு உடன் விடுவித்து அனுப்புதல் சார்ந்து.

பார்வை: சென்னை–6 அரசுத் தேர்வு துறை இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.000616/எச்1/2022 நாள் 30.03.2022.

***

பார்வை 1 இல் காணும் செயல்முறைகளின்படி 01.06.2022 முதல் விடைத்தாள் திருத்தும் பணி நடைபெற்று வருகிறது,இந்நிலையில் சில பள்ளிகளிலிருந்து விடைத்தாள் திருத்தும் பணிக்கு ஆசிரியர்களை விடுவிக்காமல் தலைமையாசிரியர்கள் மற்றும் முதல்வர்கள் இப்பணியின் முக்கியத்துவம் கருதாமல் அலட்சியமாக இருப்பதாக தெரிய வருகிறது. மாணவர்களின் நலன் கருதி. தங்கள் பள்ளியில் உள்ள முதுகலை மற்றும் பட்டதாரி ஆசிரியரை உடன் விடுவித்து விடைத்தாள் திருத்தும் பணியில் 06.06.2022 முதல் ஈடுபடுத்த வேண்டுமென, தலைமையாசிரியர்கள் மற்றும் முதல்வர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் இப்பணிக்கு தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்கள் விடுவிக்கப்படாத நிலையில் அவ்வாசிரியர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருப்பின் அவ்விவரத்தை இவ்வலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**இது மிகவும் அவசரம்.**

ஒப்பம்/–
முதன்மைக்கல்வி அலுவலர்
சென்னை

பெறுநர்

கல்வி அலுவலர் பெருநகர சென்னை மாவட்டம்

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் சென்னை மாவட்டம்

அனைத்து மெட்ரிக் உயர்/மேல்நிலைப் பள்ளி முதல்வர்கள். சென்னை மாவட்டம்